## க.பொ.த (உயர் தரம்) பயிற்சிப் பரீட்சை – 2019- மார்ச்
## தரம் 13

பாட இலக்கம் 21 பொருளியல்

## புள்ளி வழங்கும் திட்டம்
## பகுதி 1

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 5 | 11. | 4 | 21. | 2 | 31. | 2 | 41. | 2 |
| 2. | 3 | 12. | 5 | 22. | 4 | 32. | 3 | 42. | 2 |
| 3. | 4 | 13. | 1 | 23. | 4 | 33. | 5 | 43. | 3 |
| 4. | 3 | 14. | 4 | 24. | 4 | 34. | 3 | 44. | 4 |
| 5. | 3 | 15. | 2 | 25. | 1 | 35 | 4 | 45 | 3 |
| 6. | 5 | 16. | 2 | 26. | 1 | 36. | 4 | 46. | 2 |
| 7. | 3 | 17. | 1 | 27. | 3 | 37. | 4 | 47. | 1 |
| 8. | 1 | 18. | 3 | 28. | 2 | 38. | 3 | 48. | 2 |
| 9. | 4 | 19. | 3 | 29. | 3 | 39. | 4 | 49. | 5 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 1 | 40. | 5 | 50. | 5 |

## விடைகள்
## பகுதி 11

1. i) மனிதனது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்குத் தேவையான மாற்றுப் பயன்பாடுடைய வளங்கள் சமூகத்திடம் காணப்படும் அளவு போதமலிருப்பது அருமை எனப்படும். (2 புள்ளிகள்)

ii) மாற்றுப் பயன்பாடுடைய வளங்கள் அருமையாக இருப்பதனாலேயே எதனை, எந்தளவில், எவ்வாறு, யாருக்காக உற்பத்தி செய்வதெனும் தெரிவுப் பிரச்சனை தோன்றுகிறது. மாற்றுப்பயன்பாடுடைய வளங்கள் அருமையின்றி காணப்படுமாயின் தெரிவு பெறமாட்டாது. (2 புள்ளிகள்)

தனியார் வள உரிமை. - சந்தைப் பொருளாதாரம்.
அரச வள உரிமை. - கட்டளைப் பொருளாதாரம்.
தனியார் மற்றும் அரச வள உரிமை. - கலப்புப் பொருளாதாரம்.
(4 புள்ளிகள்)


iii) பொருளாதார செயற்திறன்
பொருளாதார வளர்ச்சி.
பொருளாதார உறுதி.
புற உறுதி நிலை.
பொருளாதார சமத்துவம்.
நிறை தொழில் மட்டம்.
சூழலின் தரம்.
(எவையேனும் நான்கிற்கு 4 புள்ளிகள்)


iv) 1. வளத்திரட்சி மாற்றமடைதல். (1 புள்ளி)

புதிய வளக்கண்டுபிடிப்பு.
புதிய வளங்களின் உரிமையைப் பெறல்.
வெளிநாடுகளிலிருந்து வளங்கள் உட்பாய்தல்.
வெளிநாட்டு முதலீடுகள். (எவையேனும் இரண்டிற்கு 1புள்ளிகள்)

2. வளங்களின் வினைத் திறன் உயர்வடைவதன் மூலம். (1 புள்ளி)
தொழில் நுட்ப முன்னேற்றம்.
ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கல்.
புதிய நுட்ப முறைகள் (எவையேனும் இரண்டிற்கு 1புள்ளிகள்)

v)




(படத்திற்கு 2 புள்ளிகள் விளக்கத்திற்கு 2 புள்ளிகள்)

2. i) தொடர்புடைய பண்டங்களின் விலை குறைவடைதல்.
உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலை குறைவடைதல்.
தொழில்நுட்ப முன்னேற்றம்.
நிரம்பலாளர்களின் தொகை அதிகரித்தல்.
அரசு உற்பத்தியாளர்களிடம் அறவிடும் வரிகளை நீக்குதல்.
அரசு உற்பத்தியாளர்களிற்கு மானியம் வழங்குதல்.
எதிர்காலத்தில் குறித்த பண்டத்தின் விலை குறையும் என உற்பத்தியாளர்கள் எதிர்பார்த்தல்.
(4 புள்ளிகள்)


ii)
1. பண்டத்தின் தன்மை அதாவது அத்தியாவசியப் பண்டமாக இருத்தல்.
2. பிரதியீடுகளின் தொகை அதாவது பிரதியீடுகளின் எண்ணிக்கை குறைவாக இருத்தல்.
3. நுகர்வோனின் வருமானத்தில் பண்டத்தை கொள்வனவு செய்வதற்குத் செலவிடப்படும் அளவின் முக்கியத்துவம். அதாவது வருமானத்தில் குறித்த பொருளுக்கு செலவிடப்படும் அளவு குறைவாக இருத்தல்.
4. பண்டத்திற்கு காணப்படும் மற்றைய பயன்பாடுகளின் தொகை. அதாவது ஒரு சில தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் பண்டங்களுக்கு. விலைமாற்றத்திற்கு ஏற்ப தம்மை இசைவாக்கிக் கொள்வதற்கு செல்லும் காலம். அதாவது குறுங்காலத்தில்.

(4 புள்ளிகள்)

iii) X பண்டத்தை பொறுத்தவரை A யின் வருமானம் அதிகரிக்க அதன் கேள்வி அதிகரிப்பதால் அது சாதாரண பண்டமாகும்.
X பண்டத்தை பொறுத்தவரை B யின் வருமானம் அதிகரிக்க அதன் கேள்வி குறைவடைவதால் அது இழிவுப் பண்டமாகும். (4 புள்ளிகள்)

iv) அ. Qd = 120 – 5p QS = -20 + 5p (2 புள்ளிகள்)
ஆ. சமநிலை விலை 14 சமநிலைத் தொகை 50 (2 புள்ளிகள்)
இ. நுகர்வோன் மிகை 250 உற்பத்தியாளன் மிகை 250
பொருளாதார மிகை 500 (4 புள்ளிகள்)

3. (i)




இந்நிலையில் வரி வித்திக்கப்படும்போது வரியின் பெரும்பகுதியை நுகர்வோரும் சிறிய பகுதியை உற்பத்தியாளரும் தாங்குவர்.

(படத்திற்கு 3 புள்ளிகள் விளக்கத்திற்கு 1 புள்ளி)

ii) மேலதிக உற்பத்திகள் சந்தையில் குவிதல்.
சேவை தொடர்பாகப் பார்க்கும் போது வேலையின்மை பிரச்சனை தோன்றுதல்.
வியாபாரிகள் சட்டத்தை மீற முயலுதல்.
மிகை முதலீட்டு நிலையொன்று உருவாகுதல்.
சமூக நலனுக்கு பாதிப்பு ஏற்படுதல். (4 புள்ளிகள்)

iii) அ. ABCDEF
ஆ. AF
இ. CE (6 புள்ளிகள்)

iv) அ. 200 அலகுகள்.
ஆ. 6000 ரூபா.
இ. 1000 ரூபா. (6 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

4. i) நேர்செலவு.

உற்பத்திச் செயற்பாட்டின்போது நிறுவனத்தின் மூலம் வெளியிலிருந்து கொள்வனவு செய்யும் உள்ளீடுகளுக்கான செலவு. (1 புள்ளி)

உ.ம். மூலப்பொருள் கொள்வனவுச் செலவு.
ஊழியர்களுக்கான சம்பளம். (1 புள்ளி)

நேரில் செலவு.

உற்பத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் நிறுவனத்திடம் உடமையாகவுள்ள வளங்களின் அமையச் செலவின் அளவு ஆகும். (1 புள்ளி)

உ.ம். இழந்த வருமானம்.
பெறுமானத் தேய்வுகள்.
சாதாரண இலாபம். (1 புள்ளி)

ii) நேர்ச் செலவு. 7800 (1 புள்ளி)
நேரில் செலவு. 3000 (1 புள்ளி)

கணக்கியல் இலாபம் = மொத்த வருமானம் - வெளிப்படையான செலவு. (1 புள்ளி)

= 40000 – 7800
= 22200. (1 புள்ளி)

iii) சொத்து வரி
காப்புறுதித் தவணைக் கட்டணம்.
மூலதனத்திற்காக செலுத்தப்படும் வட்டி.
சாதரண இலாபம். (ஒவ்வொன்றுக்கும் ½ புள்ளி வீதம் மொத்தம் 2 புள்ளிகள்)

iv) உற்பத்தி எவ்வளவாக இருந்தாலும் மொத்த நிலையான செலவின் அளவு மாற்றமின்றி ஒரேயளவாக இருக்கும். (1 புள்ளி)

மொத்த நிலையான செலவினை உற்பத்தி அலகுகளால் பிரிக்கும்பொது சராசரி நிலையான செலவு பெறப்படும். TFC/Q = AFC (1 புள்ளி)

எனவே உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க சராாசரி நிலையான செலவு குறைவடைந்து செல்லும். (1 புள்ளி)

சராசரி மாறும் செலவு உற்பத்தி அதிகரிக்க அதிகரித்துச் செல்லும். உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க சராாசரி நிலையான செலவு குறைவடைந்து செல்வதால் சராசரி மொத்தச் செலவுக் கோட்டுக்கும் சராசரி நிலையான செலவுக் கோட்டுக்குமிடையிலான செங்குத்து தூரம் குறைவடைந்து செல்லும். (1புள்ளி)

v) தொழில்நுட்பச் சிக்கனம்
முகாமைத்துவம் தொடர்பான சிக்கனங்கள்
சந்தைப்படுத்தல் சிக்கனங்கள்
நிதியீட்டச் சிக்கனங்கள்
ஆபத்தை எதிர்நோக்கல் தொடர்பான அளவுத்திட்டச் சிக்கனங்கள்
(1/2 வீதம் 2 புள்ளிகள்)

vi) பிரதான மூலப்பொருள் தொடர்பான உரிமை.
அரசின் சட்டரீதியான தடைகள்.
அளவுத்திட்ட சிக்கனங்கள் தோன்றுதல். (2 புள்ளிகள்)

vii) நிரம்பலாளர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்.
பிரவேசத் தடை காணப்படுதல்.
வேறுபடுத்தப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படுதல்.
நிறுவனங்களிடையே அன்னியோன்னியத் தொடர்புகள் காணப்படுதல்.
(1/2 வீதம் 2 புள்ளிகள்)

5. i) நாணயக் கொள்கை.
இறைக் கொள்கை.
நிரம்பல் ஊக்குவிப்புக் கொள்கை.
வருமானக் கொள்கை.
நேரடிக் கட்டுப்பாடுகள்
வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள்.
( ஒன்றுக்கு ½ புள்ளி வீதம் மொத்தம் 2 புள்ளிகள்)

ii) சந்தையில் விற்பனையாகும் அனைத்துப் பொருட்களும் சேவைகளும்.

உற்பத்தி செய்த நிறுவனம் தவிர ஏனைய நிறுவன அலகுகளுக்காக உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் சேவைகளும்.

தங்களுடைய இறுதி நுகர்வு நோக்கமாகவோ மூலதனத் திரட்டலுக்காகவோ உற்பத்தி செய்து அதன் உரிமையாளர் மூலம் தமக்காக வைத்துக் கொண்ட அனைத்துப் பொருட்களும்.

The National e-learning Portal for General Education

தாம் குடியிருக்கும் வீடுகளினால் பெற்றுத் தரப்படும் வதிவிட சேவைகள்.
சம்பளம் பெறும் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படும் குடும்ப வேலைகளும் தனிப்பட்ட சேவைகளும்.
துணி நெய்தல், உடைகள் தைத்தல், பின்னப்பட்ட உடைகள், தொப்பி மற்றும் வீட்டுப் பொருட்கள் செய்தல்.

( ஒன்றுக்கு ½ புள்ளி வீதம் மொத்தம் 2 புள்ளிகள்)

iii) அ. உள்நாட்டு செலவு = மொத்த நுகரவுச் செலவு + மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்.

1200. (2 புள்ளிகள்)

ஆ. மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு செலவு + தேறிய ஏற்றுமதி
= 1200 + 150
= 1350. (2 புள்ளிகள்)

இ. இருப்பக்களில் மாற்றம்ஆக்கம். = மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் - (நிலையான மூலதன ஆக்கம் + பெறுமதியில் ஏற்படும் மாற்றம்.)
= 500 – ( 250 + 150 ) (2 புள்ளிகள்)

iv) நுகர்வுச் சார்பு வேறுபடல்.
சுயாதீன நுகர்வு வேறுபடல்.
அரச நுகர்வுச் செலவு வேறுபடல்.
தன்னிச்சையான வரி மாற்றமடைதல்.
மாற்றல் செலவினம் மாற்றமடைதல்.

( ஒன்றுக்கு ½ புள்ளி வீதம் மொத்தம் 2 புள்ளிகள்)


v) நுகர்வுப் பெருக்கி. முதலீட்டுப் பெருக்கி.
அரச செலவுப் பெருக்கி வரிப் பெருக்கி
மாற்றல் பெருக்கி சமநிலை வரவு செலவுத் திட்டப் பெருக்கி.

( ஒன்றுக்கு ½ புள்ளி வீதம் மொத்தம் 2 புள்ளிகள்)

vi) அ. $y = C + I + G$
$= 800 + 0.8yd+400+300$
$= 800+0.8(y-200)+700$
$y = 6700$ (2 புள்ளிகள்)

ஆ. 500 ஆல் (2 புள்ளிகள்)

இ.




(2 புள்ளிகள்)

6. i) பரிமாற்றூடகமாகத் தொழிற்படல்.
பெறுமானத் திரட்டாகத் தொழிற்படல்.
கணக்கீட்டு அலகாகத் தொழிற்படல்.
பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவியாகத் தொழிற்படல். (4 புள்ளிகள்)

ii) பொதுமக்களிடமுள்ள நாணயம்.
பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்பக்கள்.
பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள சேமிப்பு, தவணை வைப்புக்கள்.
வதியாதோர் வெளிநாட்டு சட்ட முறைப் பணக்கணக்ககளில் உள்ள தவணை, மற்றும் சேமிப்பு வைப்புக்களில் 50%.
வெளிநாட்டு வங்கியலகுகளில் காணப்படும் வதிவோருக்குரிய தவணை, மற்றும் சேமிப்பு வைப்புக்கள். (2 புள்ளிகள்)

iii) பொருளாதாரத்தின் மொத்தப் பணநிரம்பல் மற்றும் அடிப்படைப் பணம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு பணப்பெருக்கியாகும்.

பணப்பெருக்கி = பணநிரம்பல்.
…………….
உயர்வலுப் பணம். (2 புள்ளிகள்)

iv) அ. உயர்வலுப் பணம். = பொது மக்கள் வசமுள்ள நாணயம். 2000
மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கியின் வைப்பு 100
2100.

ஆ. பணநிரம்பல்
பணப் பெருக்கி = ……………………… 2500/ 2100 = 1.19
நாணயத்தளம்.

(4 புள்ளிகள்)

v) கேள்வித்தூண்டல் பணவீக்கம் என்பது பொருாதாரம் நிறைதொழில் மட்ட நிலையினை அடைந்த பின்னர் மொத்தக் கேள்வி அதிகரிக்குமாயின் பொருட்கள் சேவைகளின் அளவினை அதிகரிக்க முடியாத காரணத்தினால் பொதுவிலை மட்டம் அதிகரிக்கத் தொடங்குகிறது.

**கேள்வித் தூண்டல் பணவீக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள்.**

- தனியார் நுகர்வு அதிகரித்தல்.
- பொது நுகர்வு அதிகரித்தல்.
- முதலீடு அதிகரித்தல்.
- ஏற்றமதி அதிகரித்தல்.

செலவுத் தூண்டல் பணவீக்கம் என்பது. உற்பத்திச் செலவு அதிகரித்து மொத்த நிரம்பல் குறைவடைவதனால் பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரிக்கின்றன.

**செலவுத் தூண்டல் பணவீக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள்.**

- மூலப்பொருட்களின் விலைகள் அதிகரிப்பு.
- கூலி அதிகரிப்பு (4 புள்ளிகள்)

vi) பொதுமக்கள் புழக்கத்திற்காக கொண்டுள்ள மொத்த பண அளவே பணநிரம்பலாகும். இது பொதுமக்களிடமுள்ள நிதிச் சொத்துக்களின் கூட்டாக அமைவதால் இருப்பு ண்ணக்கருவாகும். இதன் உருப்படிகள்.

குறுகிய பணநிரம்பல் விரிந்த பணநிரம்பல்.
சீராக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் மிக விரிந்த பணநிரம்பல்.

(4 புள்ளிகள்)

7. i.

மிகை ஒதுக்குகளை வங்கிகள் வைத்திருக்க விரும்புதல்.
வங்கிக் கடனுக்கு கேள்வி காணப்படாமை.
வங்கி முறைமைக்கு வெளியேயான பணப்பாய்ச்சல். (4 புள்ளிகள்)

ii. அ. 2500 (2 புள்ளிகள்)
ஆ. மொத்தக் கடன்கள் 9500 (5000 என்றாலும் சரி) (4 புள்ளிகள்)
இ.

| பொறுப்புக்கள் | | சொத்தக்கள் | |
|---|---|---|---|
| வைப்பு | 10000 | ஒதுக்கம் | 500 |
| | | கடன்கள். | 9500 |
| | 10000 | | 10000 |

(4 புள்ளிகள்)

ii. கொள்கை வட்டி வீதங்கள்.
வங்கி வீதம்
துணைநில் வைப்பு வசதி வீதம்.
துணைநில் கடன் வழங்கள் வீதம்.
திறந்த சந்தை நடவடிக்கை.
சட்ட ரீதியான ஒதக்கு வீதம். (4 புள்ளிகள்)

iii. பணக்கொள்கை என்பது பொருளாதார உறுதிப்பாட்டினை அடையும் நோக்கில் மத்திய வங்கியானது பணச் சந்தையினூடாக கடன் வழங்கல், வட்டி வீதம், பணநிரம்பல் போன்ற மாறிகளை ஒழுங்குபடுத்தி மொத்தக் கேள்வியை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகும். (2 புள்ளிகள்)

8. i) வள ஒதுக்கீட்டின் வினைத்திறனின்மை.
பேரினப் பொருளாதார உறுதியின்மை.
வருமானப் பங்கீட்டில் மமின்மை. (4 புள்ளிகள்)

ii) பொருளாதார நடவடிக்கையொன்றின் காரணமாக அந்நடவடிக்கையுடன் தொடர்புபடாத மூன்றாம் நபருக்கு கிடைக்கும் நன்மை நேர்க்கணிய வெளிவாரி விளைவாகும்.

- பூந்தோட்டம் ஒன்றை வைப்பதனால் தேன் உற்பத்தி அதிகரித்தல்.
- காடு வளர்ப்பு செயற்பாடு காரணமாக புதிய நீர் நிலைகள் உருவாகுதல்.

(4 புள்ளிகள்)

iii) **நிலைக்குத்தான நியாயத்துவம்.**
சமமற்ற பொருளாதார இயலுமையைக் கொண்ட தனிநபர்களை சமனற்றவர்களாகக் கருதி வருமானம் கூடும்போது அதிக வரிச்சமையைத் தாங்கச் செய்வதாகும்.

**கிடையான நியாயத்துவம்.**
சமமான பொரளாதார இயலுமையைக்கொண்ட நபர்களை ஒரே சமமானவர்களாகக் கருதி ஒரே அளவான வருமானத்தைக் கொண்டவர்கள் சமமான வரிச்சுமையை ஏற்க வேண்டும் என்பதாகும்.
(4 புள்ளிகள்)

vi) **நடைமுறைச் செலவு.**
மீண்டும் மீண்டும் ஏற்படும் செலவுகளாகும். குறிப்பிட்ட வருடத்தினுள் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் செய்ய வேண்டிய செலவுகளும் மாற்றல் கொடுப்பனவுகளும் இதில் அடங்கும். செலவு செய்கின்ற காலத்திற்குள்ளேயே பொருளாதாரத்திற்குப் பிரதிபலன்களைப் பெற்றுத்தரும் ஒரு செலவாகும்.

- ஊழியர் சம்பளக் கொடுப்பனவு.
- உணவு மானியம்.
- ஒய்வூதியக் கொடுப்பனவு.
- போக்குவரத்துச் செலவுகள்.

**மூலதனச் செலவு.**
பொதுவாக ஒரு வருடத்திற்கு கூடிய பயன்பாட்டைக் கொண்ட பண்டங்களைக் கொள்வனவ செய்வதற்கும் மூலதனப் பண்டங்களை உருவாக்குவதற்கும் அவற்றைப் பழுதபார்த்தலுக்குமாகச் செய்யப்படகின்ற செலவாகும்.

- இயந்திரப் பொறிகளைக் கொள்வனவு செய்தல்.
- கட்டடங்கள் நிர்மாணம்.
- வாகனங்களை கொள்வனவு செய்தல்.
- பெருந்தெருக்களை நிர்மாணித்தல். (4 புள்ளிகள்)

vii) மொத்தக் கடன்கள். வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரிக்கும்.
வங்கித்துறையிலிருந்து கடன் பெற்றால் பணவீக்க விளைவுகள் ஏற்படும்.
தனியார் துறைக்கான கடன்கள் குறைவடையும்.
மக்களுக்கான சேமநல வசதிகள் பாதிக்கப்படும்.
கடனுக்கான கேள்வி கூடி வட்டிவீதம் அதிகரிக்கும். (4 புள்ளிகள்)

9. i) வளத்திரட்சியில் வேறுபாடு காணப்படல்.
தொழில்நுட்ப வேறுபாடு
சுவையில் காணப்படும் வேறுபாடு.
அளவுத்திட்ட சிக்கனங்கள் வேறுபடல்.
இட அமைவு வேறுபடல். (4 புள்ளிகள்)

ii) **ஆதரவான வாதங்கள்.**

- தேசிய பாதுகாப்பு.
- உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதகாத்தல்.
- குழந்தைப் பருவக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்.
- பொருளாதார உறுதியை ஏற்படத்துதல். (இரண்டு விடயங்களுக்கு 2 புள்ளிகள்)

**எதிரான வாதங்கள்.**

- உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகள் சுருக்கமடையலாம்.
- தேசிய வருமானம் குறைவடையலாம்.
- தரமான பண்டங்களின் உற்பத்தி குறைவடையும்.
- வினைத்திறனற்ற தொழில்கள் உருவாகலாம். (இரண்டு விடயங்களுக்கு 2 புள்ளிகள்)

iii) அ. கணணி – Y நாடு.
தேயிலை – Y நாடு. (2 புள்ளிகள்)
ஆ. கணணி Y நாடு, தேயிலை X நாடு. (4 புள்ளிகள்)
அ. Y நாடு கணணி, X நாடு தேயிலை. (2 புள்ளிகள்)
வர்த்தகத்திற்கு முன்.

| நாடு | கணணி | தேயிலை |
|---|---|---|
| X | 50 x 20 = 1000 | 50 x 200 =10000 |
| Y | 50 x 120 = 6000 | 50 x 240 = 12000 |
| மொத்தம் | 7000 | 22000 |

The National e-learning Portal for The General Education

வர்த்தகத்திற்கு முன்னர் நாடு X 1000 கனினிகளையும், 10000 தேயிலையையும் உற்பத்தி செய்து நுகரும். நாடு y 6000 கனினிகளையும், 22000 தேயிலையையும் உற்பத்தி செய்து நுகரும்.
(2 புள்ளிகள்)

| நாடு | கணணி | தேயிலை |
|---|---|---|
| X | - | 100 x 200 = 20000 |
| Y | 100 x 120 = 12000 | - |
| மொத்தம் | 12000 | 20000 |

மொத்த உற்பத்தி 29000 இலிருந்து 32000 ஆக அதிகரித்த காரணத்தால் இரு நாடுகளிலும் நுகர்வ மட்டங்கள் அதிகரிக்கும். (2 புள்ளிகள்)

10. i) ஓர் அலகு ஏற்றமதியின் இறக்குமதி இயலளவு வர்த்தகமாற்று விகிதமாகும்.

$$\text{வர்த்தக மாற்று வீதம்} = \frac{\text{ஏற்றமதி விலைச் சுட்டெண்} \times 100}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்.}}$$

(2 புள்ளிகள்)

ஓர் அலகு ஏற்றமதியின் இறக்குமதி அலகுகளை அறிய முடியும்.
நாட்டின் மெய் வருமான மாற்றத்தை அறிய முடிதல்.

ii) சர்வதேச வர்த்தகத்தின் நன்மைகள் பகிரப்படுதலை அறிய முடியும். (2 புள்ளிகள்)
**பெயரளவு நாணய மாற்று விகிதம்**. உள்நாட்டு நாணய அலகொன்றக்கான வெளிநாட்டு நாணய அலகு பரிமாற்றப்படும் வீதமாகும். இதனை நேரடிப் பரிமாற்று முறை மற்றும் மறைமக பரிமாற்று முறையென இரு வகையாகப் பாகுபடுத்தலாம். (2 புள்ளிகள்)
**மெய் நாணய மாற்று விகிதம்**. இரு நாடுகளில் நிலவும் விலைமட்ட வேறுபாடுகளுக்கு ஏற்ப சீராக்கப்பட்ட பெயரளவு நாணய மாற்று வீதம் இதுவாகும்.

$$\text{மெய் நாணய மாற்று வீதம்} = \frac{\text{உள்நாட்ட விலை மட்டம்.}}{\text{வெளிநாட்ட விலை மட்டம்.}}$$

(2 புள்ளிகள்)

iii) பண்டக் கணக்கு
பணிகள் கணக்கு
1ம் நிலை வருமானக் கணக்கு.
2ம் நிலை வருமானக் கணக்கு.
மூலதனக் கணக்கு மற்றும் நிதிக் கணக்கு. (4 புள்ளிகள்)

iv) ஏற்றமதிப் பொருட்களின் விலை குறைவடையம். இதனால் ஏற்றுமதி அதிகரிக்கும்.
இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிக்கும். இதனால் இறக்குமதி குறைவடையும்.
ஏற்றமதி வருமானம் அதிகரிக்க இறக்கமதி செலவு குறைவடைய சென்மதி நிலுவை பிரச்சினை தீரும். (4 புள்ளிகள்)

v) வெளிநாட்டு உறுதியென்றால் வெளியக கணக்குகள் மீதான நிலைத்திருக்கும் தன்மையினை மேம்படுத்தும் முயற்சியில் அரசாங்கத்தின் மிக முக்கிய குறிக்கோளாகும். இறக்குமதிச் செலவை ஈடுசெய்வதற்குப் போதுமான அளவிற்கு ஏற்றுமதி வருமானம் காணப்படும்போது வெளியக உறுதியானது அடையப்படலாம். இதனால் நாணய மாற்று வீத தளம்பல்களை தடுக்க முடியும். வெளியக உறுதிப்பாட்டிற்கான நேரடி அளவீடுகள் எதுவுமில்லை. ஆனாலும் உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் நாணய மாற்று வீதத்தின் நிலைமை போன்ற குறிகாட்டிகள் மூலம் வெளியக உறுதிப்பாட்டை அறிய முடியும். (4 புள்ளிகள்)